## CC.NO.43/2020 PW-8

**நாள்** : 22.05.2024

பெயர் : திவாகர்

த/பெ : செல்வராஜ்

**(1ம் எதிரி அஜர், எதிரிகள் 2,,4 ஆஜரில் இல்லை. 2 மற்றும் 4 வது எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3ம் எதிரி காலமாகிவிட்டார்)**

**சாட்சி மனுவின் மீது மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் நேரு நகரில் வசித்து வருகிறிர்களா என்றால் இப்போது அங்கு வசித்து வருகிறேன். போலீஸ் விசாரணையின் போதும் நீங்கள் நேரு நகரில் வசித்து வந்ததாக தான் குறிப்பிட்டுள்ளிர்கள் என்றால் ஆமாம். அ.சா.1 புவனேஷ்வரி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர் என்னுடன் பணிபுரிந்து வரும் நண்பரின் மகள். அவர் பெயர் என்ன என்றால் லோகநாதன். லேகநாதன் சோளிங்கரில் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். சோளிங்கருக்கும் நிங்கள் வசிக்கும் நேரு நகருக்கும் 30 கிலோ மீ இருக்கும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நீங்கள் புவனேஷ்வரி வசித்து வரும் அதே தெருவில் வசித்து வருவதாக பொய் சாட்சியம் அளித்துள்ளிர்கள் என்றால் நான் டிவிஎஸ் நிறுவனத்தில் வேலை பார்த்த போது லோகநாதன் வசித்த தெருவில் வசித்து உள்ளனே். அதை தான் பதிவு செய்தேன். போலீஸ் விாசரணையின் போது லோகநாதனோடு டிவிஎஸ் நிறுவனத்தில் வசித்து வந்த சமயம் அவர் தெருவில் வசித்து வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீஸ் விசாரணையில் நீங்கள் கூலி தொழில் செய்து வருவதாக தான் பதிவு செய்துள்ளிர்கள் என்றால் அது எனக்கு நினைவில்லை.

போலீஸ் விசாரணை மற்றும் முதல் விசாரணையில் வழக்கு சம்மந்தமான விவரம் யார் சொல்லி உங்களுக்கு  தெரியவந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார் எப்போது உங்களை விசாரித்தார்கள் என்றால் 2020 ம் வருடம் 07 ம் தேதி மாசம் நினைவில்லை. உங்களை போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று முதல் விசாரணை மற்றும் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது தவறு. உங்களை போலீசார் எங்க வைத்து விசாரித்தார்கள் என்ற விவரம் சொல்லவில்ல என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் காவல்நிலையத்திற்கு அழைப்பாணை அனுப்பி வரவழைத்தார்கள் என்றால் ஆமாம். உங்களை போலீசார் உங்களை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்த சமயம் புவனேஷ்வரி பெற்றோர் இருந்தார்களா என்றால் ஆமாம். அ.சா.2 ன் நண்பர் என்ற காரணத்தினால் மட்டுமே போலீசார் சாட்சி பட்டியலில் உங்களை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்தை படித்து பார்த்திர்களா என்றால் படித்து பார்த்தேன். போலீசார் உங்களை விசாரிக்கவில்லை அவர்களாகவே எழுதிய ஆவணத்தில் கையொப்பம் மட்டும் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. அந்த காரணத்தினால் தான் முதல் விசாரணைக்கும் போலீசார் விசாரணைக்கும் முரண்பாடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.2 உங்கள் நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.